# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.3/2016

Deposition of witness for Prosecution – PW13

| | | | |
|---|---|---|---|
| Name | : சிவசங்கர் | Caste | : |
| S/o. | : ஆறுமுகம் | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed on 04.08.2025 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

A1 & A2 present.

முதல் விசாரணை;

நான் தற்போது எருமாபாளையத்தில் நெல்குத்திபாறையில் குடியிருக்கிறேன். நான் தறி ஓட்டி வருகிறேன். 22.12.2014ம் தேதி நான் சேலம் புதிய பேருந்து நிலையத்திலிருந்து ராசிபுரம் செல்வதற்காக ஜோதி பஸ்சில் ஏறினேன். பேருந்து சிறிது தூரம் சென்ற பின்னர் சேலம் டு நாமக்கல் ஐவேசில் வேதவிகாஸ் பள்ளியை அடுத்து போய்க்கொண்டிருக்கும்போது எதிரே ஒரு டிப்பர் லாரி வேகமாக வந்து சென்டர் மீடியன் கம்பியை இடித்து அதை தாண்டி நான் சென்ற

பேருந்தின் இடதுபுறம் இடித்துவிட்டது. அவ்வாறு இடித்ததால் அதிக சத்தம் கேட்டது. எனக்கு முன் நெற்றியிலும் பின் மண்டையிலும் காயம் ஏற்பட்டு மயக்கம் வந்துவிட்டது. வலது கால் முட்டியிலும் காயம் ஏற்பட்டது. எனக்கு மயக்கம் வந்துவிட்டதால் எனக்கு வேறு எதுவும் புரியவில்லை. நான் ஆம்புலன்சில் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றுவிட்டேன். அதன் பின்னர் போலிசார் என்னை மருத்துவமனையில் விசாரித்தார்கள். போலிசாரிடம் நான் என்னுடைய பேருந்தில் பயணம் செய்தபோது பெற்ற பயணச்சீட்டை கொடுத்தேன். என்னிடம் காண்பிக்கப்படும் பயணச்சீட்டுதான் நான் பயணம் செய்த போது எடுத்த பயணச்சீட்டு ஆகும். பயணச்சீட்டின் அசல் பிரிண்ட் அழிந்து வெற்றுபேப்பராக உள்ளது. அதன் ஜெராக்ஸ் அத்துடன் இணைக்கப்பட்டுள்ளதால் எதிரி தரப்பில் ஆட்சேபனைக்குட்பட்டு அ.சா.ஆ.5 ஆக குறியிடப்படுகிறது.

1ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

நான் சொன்னவாறு சம்பவத்தன்று ஜோதி பேருந்தில் பயணம் செய்யவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. அ.சா.ஆ.5 பயணச்சீட்டு என்னுடைய பயணச்சீட்டே இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக அவ்வாறு பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

எனக்கு ஏற்பட்ட காயத்திற்காக இழப்பீடு கோரி மனு தாக்கல்

செய்தேனா என்றால் தாக்கல் செய்தேன். எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சேலம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன், எந்த நீதிமன்றம் என்று குறிப்பாக தெரியவில்லை. நான் உண்மையில் அவ்வாறு வழக்கு தாக்கல் செய்திருந்தால் அது எந்த நீதிமன்றம் என்றும் அதன் எண் பற்றியும் சொல்லியிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.